# பொதுமக்கள் குறைதீர் கூட்டம்: தென்காசி மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி நவ.04:** தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்றுக் கொண்டார் .

தாட்கோ மூலம் 01 பயனாளிக்கு முதலமைச்சரின்ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.9.60 இலட்சம் மதிப்பிலான சுமை வாகனத்தின் சாவியினையும், உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுவிற்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரியம் மூலம் பதிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளையும் கலெக்டர் வழங்கினார்.

தொடர்ந்து, இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 375 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் கலெக்டர் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயசந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி , மாவட்ட மேலாளர் (தாட்கோ) ராஜ்குமார், உதவி மேலாளர் அருணாசலம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம்



**தென்காசி நவ.04**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல் படியும், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு செயலர் (பொதுத் தேர்தல்), சென்னை அறிவுரையின்படியும் தென்காசி மாவட்டத்தில் 01.01.2026ம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது தொடர்பாக 222 - தென்காசி சட்டமன்றத்தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி முகவர்களுக்கும் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் தென்காசி சார் ஆட்சியர் 03.11.2025 பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பயிற்சி வழங்கப்பட்டது. பின்னர் பிற்பகல் 3.00 மணி முதல் நான்கு அமர்வுகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் வைஷ்ணவி பால் , இரண்டாம் கட்ட பயிற்சி வழங்கினார்.

சங்கரன்கோவிலில்

# தமிழ் வளர்ச்சி துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட கருத்தரங்கம்

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



**சங்கரன்கோவில். நவ.4** தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் வைத்து தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திருக்குறள் திட்ட உறுப்பினர் முனைவர் வேலம்மாள் தலைமை வகித்தார்.தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் கனகலட்சுமி முன்னிலை

வகித்தார். திருக்குறள் திருப்பணிகள் குறித்து உறுப்பினர் தீத்தாரப்பன் அறிமுக உரையாற்றினார். 'வள்ளுவர் காட்டும் வாழ்வியல்' என்ற தலைப்பில் முனைவர் சங்கர்ராம் கருத்துரை வழங்கினார். திருக்குறளில் உயிரினங்கள்' என்னும் தலைப்பில் செந்தில் ஆண்டவன் பேசினார்.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கருத்தரங்கில் நகராட்சி சேர்மன் கௌசல்யாவெங்கடேஷ், வெள்ளாளங்குளம் அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன், புலவர் வாரியார்தாசன், தமிழாசிரியர் கிருஷ்ணரேவதி, தி.மு.க நகரச் செயலாளர் பிரகாஷ், சங்கரன் கோவில் நீர்நிலைகள் பாதுகாப்பு மன்ற உறுப்பினர் ஆறுமுகம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் விஜயப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாணவர் பாடாலிங்கம் நன்றி கூறினார். கருத்தரங்கில் பள்ளி கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பொது மக்களும் பங்கேற்றனர்.

# பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றம்: அமைச்சருக்கு தென்காசி முன்னாள் தி.மு.க.மாவட்டச்செயலாளர் நன்றி



**தென்காசி நவ.04** ஆலங்குளம் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு தமிழ்நாடு முதலமைச்சரால் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதல்வர் திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

கல்லூரிக்கு போதிய குடிநீர் வசதி இல்லாததால் கல்லூரிக்கு தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று குடிநீர் வடிகால் துறை அமைச்சர் நேருவிடம், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியனிடம் கோரிக்கை மனுவினை தென்காசி முன்னாள் மாவட்டச் செயலாளர் வக்கீல் சிவபத்மநாதன் வழங்கினார்.

அமைச்சர் அந்த கோரிக்கையை உயர்கல்வித்துறை இயக்குனிடமும் நேரில் சென்று முன்னாள் மாவட்ட செயலாளர் வழங்கினார். மேலும் கல்லூரி மலை அருகில் இருப்பதால் கல்லூரிக்கு அடிக்கடி அந்த மலையில் வசிக்கிற மான் பன்றி போன்ற காட்டு விலங்குகள் வந்து செல்கிறது.

எனவே அந்த கல்லூரிக்கு சுற்று சுவர் வேண்டும் என்றும், கூடுதல் பாடப்பிரிவுகள் வேண்டும் என்றும், தென்காசி ஆலங்குளம் நெடுஞ்சாலையில் இருந்து கல்லூரி வரை தார் சாலை அமைத்து தர வேண்டும் என்றும் அமைச்சரிடம் கோரிக்கையை ஏற்கனவே முன்னாள் மாவட்ட செயலாளர் வழங்கியிருந்தார். அந்த கோரிக்கை மனுவின் அடிப்படையில் தமிழ்நாடு முதல்வர் தென்காசி வருகை தந்து பல்வேறு நல உதவி திட்டங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட போது புதிய திட்டமாக ஆலங்குளம் அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் திட்டம் தொடங்கப்படும் என்கிற அறிவிப்பை வழங்கினார். முன்னாள் மாவட்ட செயலாளர் வக்கீல்.பொ.சிவபத்மநாதனுடன், மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, உள்ளிட்டவர்கள் நேரில் சென்று அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

# சுரண்டை எஸ்.ஆர்.ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் தாத்தா பாட்டியர் தினவிழா



**சுரண்டை நவ.04 :** சுரண்டை எஸ்ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் மாணவ மாணவியர்களின் தாத்தா பாட்டியர்களைக் கௌரவிக்கும் விதமாகவும் தாத்தா பாட்டியர் தின விழா நடைபெற்றது. இவ்விழாவினை பள்ளியின் நிறுவனர் தமிழ்ச்செல்வி இராஜேந்திரன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். குழல்வாய் மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம் , பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஷ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா மற்றும் புஷ்பா , தலைமையாசிரியர் மாா"க்கனி ஆகியோர் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். எஸ் ஆர் பள்ளி மாணவர்கள் தங்களது தாத்தா பாட்டிக்கு பாத பூஜை செய்தனர். தாத்தா பாட்டியர் தங்களது பேரன், பேத்திகளுக்கு ஆசி வழங்கினர். அதனைத் தொடர்ந்து தாங்கள் கொண்டு வந்த பாரம்பரிய உணவின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தனர். பின்னர் தங்களது உணவினை அனைவருக்கும் பகிர்ந்தனர். விழாவிற்கு வந்திருந்த தாத்தா பாட்டியர் ஆர்வமுடன் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற தாத்தா பாட்டியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசினைப் பள்ளியின் முதல்வர் பொன் மனோன்யா வழங்கினார். ஆசிரியை ரவின்சா மற்றும் மகாலட்சுமி ஆகியோர் மாணவர்களை ஒருங்கிணைத்தார்.

இலஞ்சி டேனியல் ராஜம்மாள் கல்லூரியில்

# பள்ளிக்கல்வி துறை சார்பில் கலைத்திருவிழா போட்டி: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி நவ.04** தென்காசி மாவட்டம் இலஞ்சி டி.டி.டி.ஏ. டேனியல் இராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் சார்பில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் இலஞ்சி டி.டி.டி.ஏ. டேனியல் இராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் சார்பில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது,

2022-23 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளின் சட்டமன்ற கூட்டத் தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பின்படி கலைத்திருவிழாப் போட்டிகள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ , மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழாப் போட்டிகள் அரசு பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும்" பசுமையும் பாரம்பரியமும் " என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. 1 முதல் 8 வரையிலான அரசுபள்ளி மாணவர்களுக்கு நடைபெற்ற கலைத் திருவிழா போட்டிகள், 04/11/2025 அன்று 1 முதல் 8 வரையிலான அரசு உதவி பெறும் மாணவர்களுக்கும், 05/11/2025 அன்று 9 முதல் 12 வரையிலான அரசுப்பள்ளி மாணவர்களுக்கும் 06/11/2025 அன்று 9 முதல் 12 வரையிலான அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கும் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி, தென்காசி மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) கண்ணன், மாவட்ட திட்ட அலுவலர் காதர் மீரான் மற்றும் மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநில அளவில் சாதனை



குற்றாலம் நவ.04: இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாநில அறிவியல் நாடகப் போட்டியில் மாநில அளவில் மூன்றாம் இடத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.( ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர்) துரிதமான விவசாயம் என்னும் தலைப்பில் போட்டி ( மண்டலம்) வட்டார அளவில் நடைபெற்றது. இப்போட்டியில் பல்வேறு பள்ளிகளில் இருந்தும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ– மாணவியர்கள் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் வென்றனர். அடுத்து மாவட்ட அளவில் தகுதி பெற்றனர். மாவட்ட அளவில் போட்டியிட்டு அதிலும் முதல் பரிசை பெற்று மாநில அளவிற்கு தகுதி பெற்றனர். மாநில அளவில் மொத்தம் 38 பள்ளிகள் கலந்து கொண்டனர். அதில் பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநில அளவில் மூன்றாம் இடத்தை வென்று சாதனை படைத்துள்ளனர். பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்கள் நாடகத்தின் தலைப்பிற்கு ஏற்ற இன்றைய கால கட்டத்தில் விவசாயத்திலன் உற்பத்தி அதிக அளவு தேவைப்படுவதால் உற்பத்தியின் அளவைப் பெருக்கி குறிப்பிட்ட காலத்தில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யுமாறு (ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர் ) துல்லியமாக விவசாயம் செய்வது பற்றி இயற்கையான பொருட்களை பயன்படுத்தி அழகாக நடித்து காண்பித்தனர். வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் டாக்டர். காந்திமதி மோகனகிருஷ்ணன்,கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ்,இயக்குனர் இராதா பிரியா,பள்ளி முதல்வர் பாலசுந்தர், தலைமையாசிரியர் செல்வலிங்கம் ஆகியோர் பாராட்டினர்.

கோவில்பட்டியில்

# வழக்கறிஞர் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா



**கோவில்பட்டி நவ.04-** கோவில்பட்டி வழக்கறிஞர் சங்கத்தின் 2025-26-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடந்தது.

சங்க அலுவலகத்தில் நடந்த இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினர்களாக பார் கவுன்சில் உறுப்பினர்கள் மைக்கேல் ஸ்டானிஸ் பிரபு, தாழை முத்தரசு மற்றும் சிவசூரிய நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு, புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினர். தேர்தல் ஆணையர் சிவக்குமார் புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதில், தலைவராக ஜி.எம்.சங்கர் கணேஷ், செயலாளராக எம்.சங்கர், பொருளாளராக பி.கோபி, துணைத் தலைவராக பி.சிவனுபாண்டி, இணை செயலாளராக எஸ். சக்திவேல் முருகன், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக சேர்மத்துரை, கார்த்திக், ராசுக்குட்டி, கருப்பசாமி, கார்த்திக் மாறன் மற்றும் நூலகராக பாலகுருசாமி, துணை நூலகராக அலெக்ஸ் பாண்டியன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

# கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் மற்றும் இணைய பாக முகவர்களுக்கான பயிற்சி கூட்டம்



**கடையநல்லூர் நவ.04:** தமிழக முதலமைச்சர் ஆணைக்கினங்க தென்மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி வழிகாட்டலில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் மற்றும் இணைய பாக முகவர்களுக்கான பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. சட்ட துறை இணை செயலாளர் ரவிச்சந்திரன், துணை செயலாளர் ராஜா முகமது, தொகுதி பார்வையாளர் குணசேகரன் ஆகியோர் SIR பற்றியும் பாக முகவர்களுக்கான பணி பற்றியும் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் திரளாக பாக முகவர்கள் மற்றும் இணைய பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் முத்தாய்ப்பாக அனைத்து ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள் அனைவருக்கும் மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன் தலா 1 கைக்கணிணி வழங்கினார்.நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஆ.ரவி சங்கர், மாவட்ட கவுன்சிலர் கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர் மா. செல்லத்துரை உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

சங்கரன்கோவிலில்

# அகில இந்திய மோட்டார் மக்கள் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



**சங்கரன்கோவில், நவ. 4** தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் அகில இந்திய மோட்டார் மக்கள் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைவர் முபாரக் சாஹிப் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் கிருபாகரன் முன்னிலை வகித்தார். ஆலோசனைக் கூட்டத்தில் செய்தி தொடர்பாளர் சௌந்தர பாண்டி, திருப்பூர் மாவட்ட தலைவர் ராஜசேகர், முத்துப்பாண்டி, தென்காசி தேர்தல் பணி குழு தலைவர் திருமலைசாமி உள்ளிட்ட பலர் சிறப்புரையாற்றினார்கள்.

இதனை தொடர்ந்து கட்சி தலைவர் முபாரக் சாஹிப், பொதுச் செயலாளர் கிருபாகரன், செய்தி தொடர்பாளர் சௌந்தரபாண்டி ஆகியோர் செய்தியாளரிடம் கூறியதாவது:-

2026-ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் அகில இந்திய மோட்டார் மக்கள் கட்சி சார்பில் சங்கரன்கோவில் தொகுதியில் பாண்டி என்பவர் போட்டியிடுகிறார். மோட்டார் தொழில் செய்து வருபவர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. அன்றாடம் கஷ்டப்பட்டு உள்ளனர் அவர்களுக்கு ஒரு விடிவு காலம் வருவதற்காக இந்த கட்சி ஜனநாயக வழியில் தேர்தலை சந்திப்போம் என முடிவு செய்து விட்டோம். அதற்காக இந்த அமைப்பை ஏற்படுத்தி ஒன்றுபட்டுள்ளோம். இதுவரை இந்த நாட்டினை மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கின்ற நான்கு கட்சிகளுமே ஓட்டுனர்களுக்கு தேவையான விஷயங்களை முழுமையாக பூர்த்தி செய்து கொடுக்கவில்லை. அதற்கு நமக்கு நாமே அதனை பூர்த்தி செய்து கொள்வோம் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து சங்கங்களையும் ஒன்றிணைக்கின்றோம்.

இதுவரை 50 சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளது. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் ஓட்டுனர்கள் சார்பாக வேட்பாளர்கள் நிறுத்துவதாக முடிவு செய்துள்ளோம். நாங்கள் வெற்றி பெற்றால் காவல்துறையினருடைய வேலை 8 மணி நேரமாக குறைப்போம். இவ்வாறு நிர்வாகிகள் கூறினர். கூட்டத்தில் மோட்டார் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

